**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 06-ம் நாள் திங்கள்கிழமை

**O.S. No.21/2025**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.3 வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிவண்ணன் | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | சீனிவாசன் | கிராமம் | : | எண்ணக்குடி |
| | | | தொழில் | : | விவசாயி |
| | | | வயது | : | 65 |

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு 3 வது சாட்சி ஆவேன். நான் எனது தரப்பு சாட்சிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விபரங்கள் அனைத்தும் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. அதிலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். தாவப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.22 ஆவணத்தினை பொறுத்து தான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். அந்த உயில் 1947 ல் எழுதப்பட்டது என்றால் சரிதான். இன்றிலிருந்து 78 ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்டது என்றால் சரிதான். எனது வயது 64 என்றால் சரிதான். இந்த உயில் எழுதப்பட்ட போது நான் பிறக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.22 ஆவணத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எப்போது பார்த்தேன் என்றால் இன்றிலிருந்து 2 மாதங்களுக்கு முன்பு பார்த்தேன். அந்த ஆவணத்தை யார் காண்பித்தார்கள் என்றால் 2 ம் வாதி வைத்து காண்பித்தார். சுப்ரமணியபிள்ளை யார் என்றால் எனது தாத்தாவின் அப்பா ஆவார். நான் அசல் ஆவணத்தை பார்க்கவில்லை என்றால் சரிதான். நகலைத்தான் பார்த்தேன். அப்போது தான் எனது தாத்தாவின் தகப்பனார் கையொப்பத்தை பார்த்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ 22 ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதிலுள்ள சர்வே எண்ணின் விபரங்கள் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.22 ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. வா.சா.ஆ.22 ஆவணத்தின் விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும், வழக்கு விபரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். 2 ம் வாதி சொல்லியதன் பேரில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.10.06 15:27:40 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal